பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

19 01 2025 | 6 45
ஞாயிற்றுக்கிழமை | காலை

தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்துபேசும் மன்கிபாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.
- புல்லட் ரயில் திட்டம் நாட்டின் பொருளாதார ஒருங்கிணைப்புக்கான சாதனமாக திகழும் என்று ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.
- உலகளாவிய பொருளாதார நடவடிக்கைகளில் இந்தியா ஆதிக்கம் செலுத்தும் என உலக வங்கி ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- ஆளும் கட்சியின் செயல்பாடுகள் காரணமாகவே ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் பிஜேபி போட்டியிடவில்லை என அக்கட்சியின் மாநில தலைவர் திரு. அண்ணாமலை தெரிவித்துள்ளார்.
- உலகக்கோப்பை கோகோ போட்டியில் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் இந்தியா இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்துபேசும் மன்கிபாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சலி செய்யும்.

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்பு செய்கிறது.

இது, இரவு எட்டு மணிக்கு மறு ஒலிபரப்பும் செய்யப்படும்.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

இது பிரதமர் திரு. நரேந்திர மோடி பங்கேற்கும் இந்த ஆண்டின் முதலாவது மன் கி பாத் நிகழ்ச்சியாகும்.

<<<<>>>>

யாழ்ப்பாணத்தில் இந்திய உதவியுடன் கட்டப்பட்டுள்ள கலாச்சார மையத்திற்கு திருவள்ளுவர் பெயர் சூட்டப்பட்டிருப்பதை பிரதமர் திரு. நரேந்திர மோடி வரவேற்றுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இந்த மையத்திற்கு திருவள்ளுவர் பெயர் சூட்டப்பட்டிருப்பது இந்தியா - இலங்கை மக்களிடையேயான ஆழமான கலாச்சார, மொழி வரலாற்று ரீதியான மற்றும் நாகரிக பிணைப்புகளுக்கு சான்றாக அமைந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த கலாச்சார மையத்திற்கு திருவள்ளுவர் பெயர் சூட்டும் நிகழ்ச்சியில் இலங்கை அரசின் புத்த சாசன மற்றும் கலாச்சாரத்துறை அமைச்சர் திரு. **Santjha,** வடக்கு மாகாண ஆளுநர் திரு. **Sunil Senevi,** மற்றும் இலங்கைக்கான இந்திய தூதரக அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

<<<<>>>>

நாட்டின் சுகாதார சேவையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டியது அவசியம் என மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா வலியுறுத்தியுள்ளார்.

அகமதாபாத் இந்திய மேலாண்மை கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற சுகாதார மாநாட்டில் பேசிய அவர், கல்வி ரீதியான ஆராய்ச்சிகள் முன்பு ஆவணமாக மட்டுமே இருந்த நிலையில் தற்போது அவை உலக அளவிலான உண்மையான சவால்களுக்கு தீர்வு காண பயன்படுத்தப்படுகிறது என்றார்.

இந்த மாநாடு 2047ஆம் ஆண்டுக்குள் இந்தியாவை ஆரோக்கியமான மற்றும் வளர்ச்சியடைந்த நாடாக மாற்றுவது என்ற தொலைநோக்கு சிந்தனைக்கு உதவிகரமாக அமையும் என்றும் திரு. ஜெ.பி. நட்டா நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<>>>>

இந்தியாவின் புல்லட் ரயில் திட்டம் ஒரு போக்குவரத்து நடவடிக்கையாக மட்டுமின்றி நாட்டின் பொருளாதார ஒருங்கிணைப்புக்கான சாதனமாக திகழும் என்று ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

மஹாராஷ்டிர மாநிலம் தானேயில் இத்திட்டப் பணிகளை ஆய்வு செய்தபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், புல்லட் ரயில் கட்டுமானப் பணிகள் சிறந்த முறையில் நடந்து வருவதாக தெரிவித்தார்.

குறிப்பாக தானே அருகே கடலுக்கு அடியில் புல்லட் ரயில் பாதை அமைக்கும் பணியில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

புல்லட் ரயில் ஓடத் தொடங்கியபின், போக்குவரத்து இணைப்பு வசதிகள் மேம்பட்டு வர்த்தக வாய்ப்புகள் அதிகரித்து மும்பை, தானே, சூரத் மற்றும் அகமதாபாத் பகுதிகளில் பொருளாதார வளர்ச்சி மேம்படும் என்றும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<>>>>

உலகளாவிய பொருளாதார நடவடிக்கைகளில் இந்தியா ஆதிக்கம் செலுத்தும் என உலக வங்கி ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த 2 ஆண்டுகளுக்கு உலகின் மிக வேகமாக வளரும் பொருளாதார நாடாக இந்தியா திகழும் என்று, ஜனவரி மாதத்திற்கான உலக வங்கியின் பொருளாதார சாத்தியக்கூறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

உலகளாவிய பொருளாதார வளர்ச்சி 2 புள்ளி 7 சதவீதமாக இருக்கும் என்றும் மதிப்பிட்டுள்ள உலக வங்கி, ஆனால் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி நடப்பாண்டில் 6 புள்ளி 7 சதவீதமாக இருக்கக்கூடும் என்றும் கூறியுள்ளது.

<<<<>>>>

ஆளும் கட்சியின் செயல்பாடுகள் காரணமாகவே ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை இடைத்தேர்தலில் பிஜேபி போட்டியிடவில்லை என அக்கட்சியின் மாநில தலைவர் திரு. அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இத்தொகுதியில் கடந்த முறை நடைபெற்ற இடைத்தேர்தலின்போது மக்கள் அடைத்து வைக்கப்பட்டதாகவும், அதுபோன்ற நிலை மீண்டும் ஏற்படக்கூடாது என்பதற்காகவே பிஜேபி போட்டியிடவில்லை என்றும் கூறினார்.

தமிழ்நாட்டில் பிஜேபி வளர்ந்துகொண்டிருப்பதாகவும், கூட்டணிக்காக யாரையும் அழைக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டில் காவல்துறையினருக்கே பாதுகாப்பு கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் திரு. அண்ணாமலை தெரிவித்தார்.

<<<<>>>>

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் மலைப்பகுதியில் லேசான சாரல் மழையுடன் அடர் பனிமூட்டம் நிலவி வருகிறது.

எனினும் சுற்றுலாப் பயணிகள் உற்சாகத்துடன் படகு சவாரி செய்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம், அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இன்று இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே சென்னை மற்றும் புறநகர்ப் பகுதகளில் நேற்று மாலையில் இருந்தே பரவலாக மழை பெய்துள்ளது.

<<<<>>>>

*__இருவரிச் செய்திகள்__*

போர்நிறுத்த ஒப்பந்தத்தின்படி பிணைக் கைதிகளின் பட்டியலை வழங்காவிட்டால் ஹமாஸ் அமைப்பினருக்கு எதிராக இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தும் என அந்நாட்டுப் பிரதமர் திரு. பெஞ்சமின் நெதன்யாகு கூறியுள்ளார்.

அமெரிக்காவின் புதிய அதிபராக பொறுப்பேற்கவுள்ள திரு. டொனால் ட்ரம்புக்கு எதிர்ப்பு தெரிவித்து வாஷிங்டனில் பேரணி நடத்தப்பட்டுள்ளது.

ஒடிசா மாநிலம் கோணார்க்கில் உள்ள சூரியக் கோவிலில் மத்திய சுரங்க அமைச்சகம் மாநில அரசுடன் இணைந்து சிறப்புக் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்துள்ளது.

மும்பையில் பாலிவுட் நடிகர் சயிஃப் அலிகானை தாக்கிய நபர் சத்தீஸ்கட் மாநிலத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் அரசு நெல்கொள்முதல் நிலையங்களின் எண்ணிக்கை 50ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

சேலத்தில் இருந்து கர்நாடகாவுக்கு கடத்திச் செல்லப்பட்ட 14 டன் ரேஷன் அரிசி கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

விழுப்புரம் மாவட்டம் தென்பெண்ணை ஆற்றில் ஆற்றுத் திருவிழா நேற்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற்ற சிறப்பு வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை ஆட்சியர் திருமதி அழகுமீனா வழங்கினார்.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தமிழக சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில் மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் நடைபெற்ற பலூன் திருவிழாவை ஏராளமானோர் கண்டுகளித்தனர்.

கரூரில் வேலுச்சாமிபுரத்தில் உள்ள காவலர் குடியிருப்பில் நடைபெற்ற பொங்கல் விழா விளையாட்டுப் போட்டிகளில் காவலர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

***<u>விளையாட்டுச் செய்திகள்</u>***

உலகக்கோப்பை கோகோ போட்டியில் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் இந்தியா இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியில் தென்னாப்பிரிக்காவுக்கு எதிராக நேற்று நடைபெற்ற ஆடவர் பிரிவு அரை இறுதி ஆட்டத்தில் 62-42 என்ற புள்ளிக் கணக்கில் இந்தியா வெற்றி பெற்றது.

மகளிர் பிரிவு அரை இறுதி ஆட்டத்தில் 66-16 என்ற புள்ளிக் கணக்கில் இந்தியா - தென்னாப்பிரிக்காவை வென்றது.

பிரான்சில் நடைபெற்று வரும் உள்ளரங்க வில்வித்தைப் போட்டியில் இந்தியாவின் **Rishab Yadav** மற்றும் **Jyoti Sureka Vennam** இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

ஆடவர் பிரிவில் **Rishab Yadav** 148-146 என்ற புள்ளிக் கணக்கில் அமெரிக்காவின் **Kyle Douglas**-ஐ வென்றார்.

மகளிர் பிரிவில் **Jyoti Sureka Vennam** 147-146 என்ற புள்ளிக் கணக்கில் குரேஷியாவின் **Amanda Minaric**-ஐ வென்றார்.

19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக் கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று வெஸ்ட் இண்டீசை எதிர்கொள்கிறது.

கோலாலம்பூரில் இப்போட்டி நண்பகல் 12 மணிக்கு தொடங்குகிறது.

விஜய் ஹசாரே கோப்பைக்கான ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் கர்நாடக அணி 36 ரன் வித்தியாசத்தில் கோப்பையை வென்றது.

வதோதராவில் நடைபெற்ற இப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் டாஸ் வென்ற விதர்பா அணி, முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இதையடுத்து களமிறங்கிய கர்நாடக அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 348 ரன் எடுத்தது.

349 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய விதர்பா அணி, 48 புள்ளி 2 ஓவரில் 312 ரன் எடுத்து ஆட்டமிழந்தது.

அரியலூர் மாவட்ட அளவிலான கபடிப் போட்டி பொன்பரப்பி குடிகாட்டில் தொடங்கியது.

**<<<<The End>>>>**